## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாவணையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் செயற்படுத்துதல், உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களித்தன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதியப்பட்ட சொத்துகளுக்கான கணக்களித் தன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் இணக்கஞ் செய்தல் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையான திட்டமிட்டப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனத்தினால் பேணிச் செல்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட போதிலும் தற்போது பாவனையில் காணப்படும் 5 சொத்துத் தொகுதிகளைச் சேர்ந்த கிரயம் ரூபா 166,845,363 தொகைக்கான சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பீடு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இற்கு இணங்க மீளாய்வு செய்து நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல் அந்தச் சொத்துக்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இற்கு இணங்க நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அடுத்த அறிக்கையிடும் காலப் பகுதியில் நியமம் 07 இன் 65 ஆம் பிரிவுக்கு இணங்க அந்தச் சொத்துக்களின் மிகுதியில் பெறுமதி மற்றும் பயன்படுத்தக் கூடிய ஆயுட் காலத்தை மீளாய்வு செய்து இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் படி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக எதிர்பார்க்கப்படுகின்றது என அறிவிக்கப்படுகின்றது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2021 ஜனவரி 01 திகதி பெற வேண்டிய தண்டப் பணத்திலிருந்து பெறப்பட்ட பணம் என அகற்றப்பட்ட தண்டப்பணம் | 11,389,273 | வழக்கு இலக்கங்கள் மற்றும் தண்டப்பணம் உட்பட விரிவான அறிக்கை | 2021 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய தண்டப்பண மீதி மாவட்ட ரீதியாக தண்டப்பணப் பொழிப்பாக்கி உரிய ஆவணங்கள் தயாரித்து வருட இறுதியில் உள்ளவாறு தண்டப்பண மீதி | வழக்கு இலக்கங்கள் மற்றும் தண்டப் பணத்துடன் விபரங்கள் சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |
| 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய தண்டப் பணத்தில் அடங்கியுள்ள முன்னைய ஆண்டுகளுக்கான பெற வேண்டிய தொகை | 247,771 | விரிவான பதிவேடு | தண்டப் பணம் மாவட்ட ரீதியில் காட்டக்கூடிய விரிவான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | வழக்கு இலக்கம் மற்றும் தண்டப் பணத்துடன் விபரங்கள் சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |
| மூலோபாய பணம் | 1,650,010 | மீதியை உறுதிப்படுத்தல்கள் | மாவட்டங்களுக்குரிய மூலோபய பண மீதியை உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | தலைமை அலுவலகத்தில் காணப்படும் மூலோபாயப் பணம் தொடர்பான மீதிகளை உறுதிப்படுத்தல்களை சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும் |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 16(2) | 2021 ஆண்டின் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த வரைபு செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகார சபை வரைபு செயலாற்றல் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2020 ஆண்டிற்கான வருடாந்த வரைபு செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் குறிப்பிட்ட ஆண்டின் வரைபு செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 30,227,000 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர் மாறான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,298,000 தொகை ஆகும். அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 31,525,000 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு மீளாய்வாண்டின் திறைசேரி மீண்டுவரும்

பெறுவனவுகள் ரூபா 27,704,000 தொகையினால் அதிகரித்தல் மற்றும் ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு ரூபா 11,677,000 இனால் குறைவடைந்திருத்தல் பிரதான காரணமாகியுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 இன் 09 ஆம் இலக்க பாவனையாளர் அதிகார சபைச் சட்டத்தின் திருத்த அலுவல்கள் 2004 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், மீளாய்வாண்டு வரை 17 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அச் சட்டத்தின் திருத்த அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2003 இன் 09 ஆம் இலக்க பாவனையாளர் அதிகார சபைச் சட்டத்தின் திருத்த அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சட்டத்தின் திருத்த அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 இன் 09 ஆம் இலக்க பாவனையாளர் அதிகார சபைச் சட்டத்தின் 13 ஆவது உப பிரிவின் கீழ் மீளாய்வாண்டின் போது மாவட்ட அலுவலகங்கள் தவிர அதிகார சபையின் பாவனையாளர் முறைப்பாட்டுப் பிரிவுக்கு கிடைத்திருந்த 1,557 முறைப்பாடுகளில் 2021 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு 318 முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது 2021 ஆண்டிற்குரிய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், விசாரனை முறைப்பாடுகள் என தொடர்ந்தும் காணப்படுவது 318 முறைப்பாடுகள் மாத்திரமே. | பாவனையாளர் முறைப்பாடு விசாரணை அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலப் பகுதியில் சட்டப் பிரிவில் பதிவு செய்யப்பட்டிருந்த 1,647 முறைப்பாடுகளில் 767 முறைப்பாடுகளுக்கு 2021 திசெம்பர் 31 திகதி அளவில் தீர்வு வழங்கப்பட்டிருந்ததுடன், 194 முறைப்பாடுகள் அகற்றப்பட்டிருந்தது. 291 முறைப்பாடுகள் தொடர்பாக விசாரனை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், 168 முறைப்பாடுகளுக்கு கட்டளைகள் | நாடு மூடப்பட்டு காணப்பட்ட காலப் பகுதி உட்பட 2021 ஆண்டில் சோதனைகளின் இலக்குகளை நெருங்குவதற்கு முடியுமான சூழல் ஒன்று நாட்டில் காணப்படாததுடன் வெளிக்கள கடமையை மேற்கொள்ளும் வசதியீனங்கள் காணப்பட்டது. அதேபோல் கணிசமான காலப் பகுதியில் அதிகார சபையின் அலுவல்கள் செயற்படாமையால் | பாவணையாளர் முறைபாடுகளின் விசாரணை அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 14 முறைப்பாடுகளுக்கான கட்டளைகள் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. அதேபோல் மீளாய்வாண்டின் போது அதிகார சபையினால் 9,494 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவை முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 15,923 சோதனைகளுக்கு ஒப்பாக 40 சதவீத வீழ்ச்சியொன்று காணப்பட்டது. அவற்றில் மீளாய்வாண்டின் போது 6,980 சோதனைகளுக்கு மாத்திரமே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | சோதனைகளை விட பரிசோதனை மற்றும் விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளலில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. | |
| (இ) | பாவணையாளர்ளுக்கு உடனடி முறைப்பாடுகள் மேற்கொள்வதற்காக 1977 தொலைபேசிச் சேவை 2013 ஆண்டு நிறுவப்பட்டிருந்ததுடன், 2021 ஆண்டில் 8,056 பொதுமக்கள் முறைப்பாடுகள் அதற்குக் கிடைத்திருந்தது. மீளாய்வாண்டு இறுதி வரை 2,646 முறைப்பாடுகளுக்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்காததுடன், 816 முறைப்பாடுகளுக்காக மாத்திரம் சோதனைகள் நடாத்தப்பட்டிருந்தது. உடனடி அழைப்புச் சேவைக்காக கிடைத்திருந்த முறைப்பாடுகளில் 07 மாவட்டங்களின் முறைப்பாடுகள் தொடர்பாக செயற்படுத்தப்பட்ட முன்னேற்றம் 15 சதவீதத்திற்கும் 53 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக காணப்பட்டது. | 1977 தொலைபேசி இலக்கத்திற்கு கிடைக்கும் முறைபாடுகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன், வெற்றிகரமான சோதனைகள் என குறிப்பிடப்படுவது அவ்வாறு மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் போது குற்றங்கள் கண்டறியப்பட்ட முறைப்பாடுகள் மாத்திரமே. மேலும், முறைப்பாடுகள் பாவணையாளர் அதிகாரச் சட்டத்தின் குற்றங்கள் என குறிப்பிடப்பட்டுள்ள குற்றவகையைச் சேராத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. அவ்வாறான ஏராளமான சந்தர்ப்பங்களில் இடப் பரிசோதனை மற்றும் விசாரணை மாத்திரம் மேற்கொள்வதற்கு நேரிடுகின்றது எனவும் குறிப்பிட வேண்டும். | பாவணையாளர்கள் முறைப்பாடுகளை தீர்க்கும் அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்ய வேண்டும். |
| (ஈ) | 2021 ஆகஸ்ட் 12 திகதிய 2240/30 இலக்கம் கொண்ட வர்த்தமானியின் மூலம் ஆய்வுகூட பரிசோதனைக்காக விலைக் கட்டுப்பாடு மேற்கொண்டிருந்த போதிலும், அந்த விலைக் கட்டுப்பாடு பாவனையாளர்கள் இடையே சென்றமை தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்வதற்காக 02 மாவட்டங்களில் 03 சோதனைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | ஆய்வுகூடப் பரிசோதனைக்காக 03 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | போதிய எண்ணிக்கையான சோதனைகள் மேற்கொள்வதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பாவணையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 8 (ஏ) பிரிவின் படி சந்தை நிலைமை மற்றும் பாவணையாளர் அலுவல்களுக்குரிய ஆய்வுகள் ஏற்றுக் கொள்ளல் அறிக்கைகள் வெளியிடல் மற்றும் பொது மக்களுக்கு தகவல்கள் வழங்குதல் அதிகார சபையின் ஒரு செய்பணி என காட்டப்பட்டிருந்தது. அதன் படி அதிகார சபையினால் 2021 ஆண்டின் போது சேதன விவசாய மற்றும் சேதன உற்பத்தி தொடர்பாக தற்போதைய நிலைமை மீதான மற்றும் சந்தையில் விற்பனை செய்யப்படும் பல்வேறு கைகழுவும் திரவங்களில் உள்ளடங்கிய அல்கஹோல் சதவீதம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 2 சந்தை ஆய்வுகள் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பாக பாவணையாளர்களை அறிவுறுத்துதல் மற்றும் பாதுகாத்தலுக்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கீழ் செயற்படும் தேசிய சேதன கட்டுப்பாட்டு அலகு (NOCU) உடன் இணைந்து பாவணையாளர்கள் மற்றும் ஏனைய உள்நாட்டு சேதன சந்தையில் தொடர்புடைய தரப்பினரை அறிவுறுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.<br>கைகழுவும் திரவம் தொடர்பாக கண்டறியப்பட்ட பண்புசார் நிலைமையில் காணப்படாதவை என கணிக்கப்பட்ட உற்பத்தி அட்டவணையில் இருந்து 11 வியாபார சின்னங்கள் சந்தையில் இருந்து பெற்றுக் கொண்டு கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனத்திற்கு (ITI) அனுப்பி அதன் பண்புசார் தன்மையினை பரிசோதனை செய்ததுடன் பண்புசார் தன்மையினை உறுதிப்படுத்த முடியாத உற்பத்திகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>எதிர்காலத்தில் ஏனைய உற்பத்திகளையும் பரிசோதனை செய்து நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சந்தையில் விற்பனை செய்யப்படும் பல்வேறு உற்பத்திகள் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பாக பாவணையாளர்களை அறிவுறுத்துதல் மற்றும் பாதுகாப்பதற்காக உரிய செயற்பாடுகள் விரைவாக எடுக்கப்பட வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பாவணையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் 61(3)(ஆ) பிரிவிற்கு இணங்க ஏதேனும் ஒரு பண்டம் நியமம் மற்றும் விவரக் குறிப்புகளுக்கு அமைவாக காணப்படாத போது மற்றும் அவ்வமைவாக காணப்படாத குறிப்பிட்ட பண்டம் ஏதேனும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத அல்லது பாவணைக்கு தகைமையில்லாத நிலைமையை அடைந்துள்ளது என வெளிப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அந்த பண்டம் அல்லது பண்ட இருப்பு தடை செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட உரிய நியமத்தில் காணப்படாத டின்மீன் விற்பனை செய்த கடை உரிமையாளர்களுக்கு மாத்திரம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பண்டத்தை உற்பத்தி செய்கின்ற 05 கம்பனிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பரிசோதனை செய்து அறிக்கைகள் பெற்றுக் கொள்வதற்காக வர்த்தக அமைச்சினால் பாவணையாளர் அதிகார சபையின் தலைவர் ஊடாக அனுப்பப்பட்ட 06 டின்மீன் மாதிரிகளில் 05 மாதிரிகள் உரிய நியமத்தில் காணப்படவில்லை என அறிக்கையின் படி உறுதிப்படுத்தப்பட்டது. எனினும் அந்த மாதிரிகளை பாவணையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் செய்முறையின் படி சந்தையில் இருந்து பெற்றுக் கொண்ட மாதிரியல்லாமையினால் வழக்குத் தாக்கல் ஒன்று மேற்கொள்வதற்கு இயலாமை காணப்பட்டது. | சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | சோதனைகள் மேற்கொள்ளல், வழக்குத் தாக்கல் செய்தல் தண்டம் அறவீடு செய்வதற்காக தரவுக் களஞ்சியம் ஒன்று அதிகார சபையினால் பேணிச் செல்லப்பட்டு வருவதுடன் தரவு களஞ்சியத்தில் காணப்படும் தகவல்களின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த தண்டத் தொகையாகிய ரூபா 40,711,000 தொகையில் மூன்றில் ஒரு பகுதியாகிய ரூபா 13,570,333 தொகை 2021 ஆண்டிற்கான தண்டப் பணம் வருமானம் என கண்டறியப்பட்டிருந்தது. 2021 ஆண்டில் தண்டப்பணம் பெறல் மாதிரிப் பரிசோதனையின் போது நீதிமன்றங்களில் இருந்து அதிகார சபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட சில தண்டப் பணங்கள் தொடர்பாக தகவல்கள் தரவு களஞ்சியத்தில் உட்படுத்தப்பட்டு இருக்காமை மற்றும் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட பெற வேண்டிய தண்டப் பண மீதியில் உட்படுத்தப்பட்டிருக்காத தண்டப் பணம் 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்குரிய | இந்த தரவு முறைமைக்கு தண்டப்பண வருமானம் தொடர்பான விபரங்கள் மாத்திரமின்றி அழைப்பாணை விடுவிக்கப்பட்டு காணப்படும் வழங்குகள் பிடியாணை விடுக்கப்பட்டு காணப்படும் வழக்குகள் மற்றும் மேன்முறையீடுகள் தாக்கல் செய்யப்படும் வழக்குகளும் அனுப்பும் போது தண்டப்பணம் விதிக்கப்பட்ட வழக்குகள் என்ற முறையில் அனைத்து சோதனைகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய தரவுகள் உட்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் தண்டப் பண தரவு முறைமை மீண்டும் விவரமாக தயாரிக்கப்பட்டு வருவதனால் எதிர்காலத்தில் இவ்வாறான அழைப்பாணை, பிடியாணை மேன்முறையீடு வழக்குகள் தொடர்பான தகவல்களும் பெற்றுக் கொள்ள முடியுமாகும். | தண்டப்பண வருமானம் சரியாக கணிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்கப்பெற்ற தண்டப் பணம் என பெற வேண்டிய தண்டப் பணத்தொகை மீதியில் இருந்து அகற்றியிருத்தல் ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் தர களஞ்சியத்தின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படும் தண்டப்பண வருமானத்தின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் திருப்தியடைய முடியாதுள்ளது. | | |
| (ஏ) | வருட இறுதியில் மூலோபயப் பணம் தொடர்பாக மாவட்ட செயலகங்களினால் அனுப்பப்பட்ட மீதியை உறுதிப்படுத்தலின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வழக்குத் தாக்கல் செய்தல் மேற்கொண்டிருக்காத சோதனைகள் தொடர்பாக மூலோபாயப் பணம் வழங்குத் தாக்கல் செய்வதற்காக மாவட்டங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 2010 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளுக்குரிய மூலோபாயப் பணமும் காணப்பட்டது. | குறிப்பிட்ட சோதனைகளுக்கான வழக்குப் பண்டங்கள் அழிவடைதல் போலவே அந்தக் காலப் பகுதியில் அனேக எண்ணிக்கையான சோதனைகளும் மேற்கொள்ளப்பட்ட போதும், நீதிமன்றத்தினால் வழக்குகளை ஏற்றுக்கொள்ளலில் வரையறை குறிப்பிடப்பட்டமையால் வழக்குகள் தாக்கல் செய்யப்படவில்லை. வழக்குகள் தாக்கல் செய்யப்படக் கூடிய சோதனைக்காக கூடிய விரைவில் வழக்குத் தாக்கல் செய்யும் படியும் அவ்வாறு முடியாவிடில் மூலோபாய பணம் தலைமை அலுவலகத்திற்கு செலவு வைத்தல் அல்லது பூர்வாங்க அங்கீகாரத்துடன், கட்டுநிதியுடன் சேர்த்துக்கொள்ளும் படியும் அனைத்து மாவட்ட தலைவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. | சோதனைகளுக்காக கால ரீதியாக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 667 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாறான பதவியணி 520 ஆக காணப்பட்டமையால் 147 பதவிகளில் | 2021.08.28 திகதிய அரச செலவுகள் மீளாய்வு சம்பந்தமாக அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் ஊழியர்கள் ஆட்சேர்ப்பதற்காக ஆரம்ப | 2 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் விசாரணை உத்தியோகத்தர் போன்ற அத்தியவசியமான பதவி |

| | | |
|---|---|---|
| வெற்றிடம் காணப்பட்டது. பணிப்பாளர் நாயகப் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக 2021 ஆகஸ்ட் 02 திகதி பணிப்பாளர் (நிதி) நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், இதுவரை பணிப்பாளர் நாயகப் பதவிக்காக நிரந்தர நியமனம் ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. அதேபோல் விசாரணை உத்தியோகத்தர்கள் 450 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி காணப்பட்ட போதிலும் உள்ளவாறான பதவியணி 357 ஆக இருந்தமையால் 93 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், 02 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் இந்த பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. | அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதுவரை நியமனம் செய்யப்படாத பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவித்திருந்தமையால் பணிப்பாளர் நாயகப் பதவி ஆட்சேர்ப்பு தாமதம் செய்யப்பட்டது. | வெற்றிடங்கள் காணப்பட்டமையால் ஆட்சேர்ப்பு மேற்கொள்ள வேண்டியிருந்தது. |